சைவ பரிபாலன சபை வெளியீடு:
ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

மாசில் வீணையும் மாலைமதியமும்' வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் - 92 ] யாழ்ப்பாணம்;- துர்மதி ஞூ சித்திரை மீ 17, 24 - 4 - 81 வெள்ளிக்கிழமை [ இல- 1.

# வாழ்க்கையில் அரிதாய் வாய்க்கும்

# மகாபிஷேகம்

## மூலத்தானம் பரிவாரங்கள் தூபிமுடி முன்னிற்கும் கோபுரம்

### யாவும் புனர்அமைப்பாய் இலங்கும் யாமளை அருள் துர்மதியிலே துர்க்காதேவியின் தோற்றம்

### சிவப்பொலிவுத் தவப்பவனி

சித்திரை இளந்தென்றலின் சீதளத் தன்மை இயற்கையின் உபயமாக மாவைக் கந்தன் வைகும் பூர்வீகச் சீர்பொலி ஆலயத்திலிருந்து எழுநூற்றுவன் இனாகத் தொடர்புள்ள துர்க்கையம்மன் கோயில் நோக்கி எழுந்தருளியது வேதம் ஓதும் வேதியர் குழாம் ஒன்று. பூரண கும்பம் குடை ஆலவட்டம் சங்குநாதம் மங்கள வாத்திய இசை வேத ஒலி திருமுறைப்பண் இவை யாவும் பேரணியாகச் சிவாசாரியர்களின் திருவுலாச் சிறப் பெய்தியது,

துர்மதி ஆண்டு சித்திரைத் திங்கள் மூன்றும்நாள் புதன்கிழமை காலை கதிரவனுடன் எழுந்தவர் விதிமுறை வழுவா வேதியர் கூட்டம், மகநட்சத்திரம் ஏகாதசித்திதி மாத்தான வேளை

மாவை ஆதீனம் மகாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள், வண்ணைவெங்கடேஸ்வர தேவஸ்தானம் பிரதிஷ்டா குரு சிவ ஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள மாவை சிவ ஸ்ரீ கு. கஞ்சநாதக்குருக்கள் நீர்வை சிவ ஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் பொன்னம்பலவாணேஸ்வரர்கோயில் சிவ ஸ்ரீ கு. குருசிதம்பரக் குருக்கள் திருக்கேதீஸ்வரம் சிவ ஸ்ரீ ச. சுப்பிரமணியபட்டர் உசன் கந்தன் கோயில் சிவ ஸ்ரீ க. சந்திரசேகரக் குருக்கள் நீர்வை சிவ ஸ்ரீ ஆ. சோமசுந்தரக் குருக்கள் இவர்கள் முன்னணி வகுக்கப் பின் தொடர்ந்தனர் பலப்பல குருமார்,

தெய்வீகத் திரு, நெறி வீதியெங்கணும் பெய்தவண்ணமாக இருந்தது. இன்று நாட்டில் எழிலுடன் சக்தி ஒளிவீசவைக்கும் துர்க்கை ஆலயம்நோக்கித் திருவுலா சென்றவண்ணம் ஆயிரம் ஆயிரம் அடியார்களின் வரவேற்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது,

துர்க்கை ஆலயத்தின் இராஜகோபுரம் நோக்கிச் சென்ற அருட்படையை ஆங்கு அடியார் படை வரவேற்றது கோயிற் குருக்கள் அந்தணப்பெருமக்களின் திருவடிப் புனிதக்கிரமம் செய்து மலர்மாலை சூட்டி வீதிவலம் அழைத்தனர்,

இந்நாட்டுப் பெருமக்களுடன் இவ்வைபவம் நின்றுவிடவில்லை தமிழ்நாடு திருக்கோயிலூர் தபோவன ஜோதி ஞானானந்த சுவாமிகளின் பிரதமசிடரும் சென்னை ஞானானந்த சமாஜத் தலைவரும் ஆகும் ஸ்ரீ ஹரிதாஸ் கிரிமகராஸ் அவர்கள் வரன்ணர்தி மாக்கமாசப் பனாலி வந்து இக்கோயிற்றி

( வளர்ச்சி 3 ம் பக்கம் )

## சித்தாந்த சாத்திரத் தெளிவு தேற்றும் திருவருட்பயன் அருளிய சந்தாநுசாரியர்

### உமாபதி சிவாசாரியர் சமயிகளுக்கோர் உற்றதுணை

சைவ சித்தாந்தத்தைத் தமிழ் மாணக்கர்களுக்கு உரிய முறையில் அமைத்தால் அதனை ஆர்வமுடன் கற்றறிவார்கள் அவர்கள் என்று சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் சிந்தித்துச் செயலாற்றத் தொடங்கியபொழுது இலகுபோதமாகச் சைவபோதம் முதலாம் இரண்டாம் புத்தகங்களை எழுதி உதவினர்; நாவலர் ஐயா முன் அமைத்த சைவ வினாவிடை முதலிய பாடப் புத்தகங்களுக்கு துணை நூல்களாக இவை விளங்கின. அடுத்தபடியாக மெய்கண்டசாத்திரங்களில் ஒன்றை மாணக்கர்களுக்கு உதவும்வகையிலே தொகுக்க நினைத்த சைவப்பெரியார் 'திருவருட்பயனே' இம் முயற்சிக்குப் பெருந்துணையாகும் என்று முடிவு செய்து அதற்குப் பதவுரை குறிப்பு முதலியன வற்றை எழுதி வெளியிட்டார்கள். இந்தப் பணி பெரும்பயனை அளிக்கத் தொடங்கியது; மாணக்கர்கள் சைவசித்தாந்தத்தை விரும்பிக் கற்கத் தொடங்கினர். அவ்வளவில் நின்றுவிடவில்லை. அத்தனை குறள் வெண்பாக்களையும் மனனம் செய்யவும் துணிந்தனர்.

### உமாபதி சிவாசாரியரின் உபயம்

கலை ஞானத்தைக் கற்குஞ் சரக்காகக் கனிவு செய்த சிவாசாரியர் அதற்குவழி நற்குஞ்சரக்கன்றை நண்ணுதலே என்று கண்ணுதற் கடவுளின்மூர்த்தத்

( வளர்ச்சி 3 ம் பக்கம் )

## சைவ சித்தாந்த மகா சமாசம் - சென்னை

## பவளவிழா - துர்க்காதேவி திருமுறை மடத்தில்

நிகழ்ச்சி நிரல்:

இடம் : துர்க்காதேவி - தேவத்தானம் - தெல்லிப்பழை

8 - 5 - 1981 வெள்ளிக்கிழமை

காலை 7 மணி மாவைக் கந்தன் கோயில் வழிபாடு யானை மீது திருமுறை ஊர்வலம்

காலை 9 - 12 மணி வரை சைவர் மாநாடு

இறைவணக்கம் : இராமநாதன் இசைக் கல்லூரி மாணக்கர்கள், சென்னை - தேவாரம் பாலசுந்தரனார்

கொடி ஏற்றம் ; அறங் காவலர் குழுத் தலைவர் பா. உ. திரு வி. தர்மலிங்கம்

ஆசியுரை : 'இலக்கிய கலாநிதி' - பண்டிதமணி சி; கணபதிப்பிள்ளை.

வரவேற்புரை : துர்க்கா துரந்தரி செல்வி தஙகம்மா அப்பாக்குட்டி

சைவ சித்தாந்த சமாசத் தலைவர் திரு தி. கி. நாராயணசாமி.

தொடக்கவுரை; ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம்,

நூல்கள் வெளியீடு கலாநிதி சு. வித்தியானந்தன் (யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர்)

ஆண்டு அறிக்கை வித்துவான் அம்பை இரா - சங்கர், சமாசச் செயலாளர்.

தலைமைப்பேருரை சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்

பிற்பகல் 2 — 00 — 3 — 30 மணி

ஆக்கப்பணி குறித்து கலந்துரையாடல்

( வளர்ச்சி 2 - ம் பக்கம் )

### ஆதீனத்தின் அழியா ஜோதி

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குகஉலகமெல்லாம்', இக் கூற்றுக்கிணங்க ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகபரமாசாரியார் அவர்கள் எமது ஈழத்தில் மட்டுமல்ல தமிழர்களும் சைவர்களும் வாழும் இப்பரந்த உலகெல்லாம் பயனடையத் தனது கண்டத்தின் மூலமாக ஆற்றிய தொண்டை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது வேத ஆகமங்களை விளக்கமான முறையிலும் உபந்நியாசங்கள் கதாகாலட்சேபம் முதலியனவாயிலாகவும் மக்களுக்கு அறிவுறுத்திவந்த ஜோதி இன்று மறைந்து விட்டது. உடல் மறைந்ததே தவிர அன்னாரின் பேரும் புகழும் அவர் ஆற்றிய சைவத்தின் தொண்டாகும் ஆதீனத்தைக் காணும்போதும் கேள்வியுறும் போதும் மக்கள் மனதை விட்டகலாவெனபது வெளிப்படை கடந்த வருடம் எமது தேவஸ்தான மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னார் 10 தினங்களாக ஆற்றிய உரைகள் தத்துவ விளக்கங்கள் பற்றி இன்னும் எங்கள் இரசமக்கள் மத்தியில் பேசப்படுவதை நாம் அறிவோம் அன்னாரின் பிரிவை அறிந்தமக்கள் தொடர்ந்து அவரது பணியைச் செய்வதற்கு யாருளரோ என அயர்வுறுகின்றனர் ஆகவே அன்று ஈழத்திற்கு ஓர் நாவலரையும், இன்று ஒரு பரமாசாரியார் அவர்களையும் தந்துதவிய நல்லைக் கந்தனையே நாளையும் ஓர் அன்பரைத் தந்துதவ வேண்டிநிற்போமாக.

தலைவர்,
கோணநாயகர் தேவஸ்தானம்,
தம்பலகாமம்.

## திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைக்குச் சீரிய தலைவர்

முதலிலே திருக்கேதிச்சரப்புனர் உத்தாரணத்தைப்பற்றி நாவலர் ஐயா ஆற்றியநல்லுரையைப்பின் பற்றிச் செயலாற்றிய சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரப்பிள்ளை அவர்கள் இச் சபையின் முதலாவது தலைவராக முறையாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சைவசித்தாந்த அறிவும் சைவாசாரமும் சீலமும் வாய்ந்த சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கல்வி கற்றுச் சைவப் பண்பிலே பயின்று அந்தஅடிச்சுவட்டில் வந்து பணியாற்றும் சித்தாந்த வித்தகர் மு ஞானப்பிரகாசம் அவர்கள் இப்பொழுது இச்சபைக்குத்தலைவராக நியமிக்கப்பெற்றிருப்பது பெருமகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

சமய அறிவும் சால்பும் சரிவர ஒருவரில் இயங்குமேயானல் அவர் சமயியாவார். திரு ஞானப்பிரகாசம் அவர்களின் வாழ்க்கை சைவஅடியார்களின் வாழ்க்கையைப் போன்றது:

சமய குரவர்கள் பாதயாத்திரை செய்து பரன்றொண்டாற்றி பத்தியாகப் பாடினார்கள்'

திரு ஞானப்பிரகாசம் அவர்கள் இற்றைக்கு இரு

(வளர்ச்சி 2 ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

துர்மதி ஞ சித்திரை மீ
17, 24 - 4 - 81 வெள்ளி

## அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு

—○—

எல்லாம் வல்லவன் ஈசன்; ஒன்றும் வல்லமை இல்லாதவன் மனிதன். எனவே நாமேன் அஞ்ச வேண்டும்! ஆக்குபவன் அமைப்பவன் அழிப்பவன் அவன். அவன்றுள் வணங்கி அமைய வேண்டிய நாம் அஞ்ச வேண்டியதில்லை; அக்நிலையிலே அஞ்சவருவதும் ஒன்றுமில்லை.

வாழ்வாங்கு வாழ வழி வகுத்திருக்கின்றனர் வழி வழி வந்த மாதவத்திருத் தொண்டர்கள். அல்லல்கள் பல உற்றனர் அந்த அடியார்கள், எனினும் இம்மியளவேனும் ஈசன்பால் அவர்கள் வைத்த எண்ணத்தைக் கைவிட்டார் இல்லை வழுக்கி விழ்ந்தனர், ஆனால் வாமன் நாமத்தை வழுத்திய வண்ணமே வீழ்ந்தெழுந்தனர் திருத்தொண்டின் செம்மை இதுவே, தொண்டர் தம் பெருமை சொல்லவும் வேண்டுமோ என்று ஏன் சொன்னார்கள்!

கோள்கள் எங்கே குடி கொண்டிருக்கின்றன என்று குதர்க்கவாதம் செய்வதிற் பயன் காண முடியுமா?

தத்தம் மதங்களே அமைவதாகச்சாற்றி மலைகின்றனர் மதம்வகுத்தோர், இவ்வாறு மாணிக்கவாசக சுவாமிகளே தர்க்கவர்க்கத்தினரைப் பற்றிக் கூறி விட்டனர்.

இதற்கெல்லாம் உளது இதமான மருந்து. ஓதுங்கள் திருமுறையை ஓதி உணருங்கள், உணரின் உளமே புகுவான் என்றும் உளனாகும் ஒருவன்.

எங்கள் உள்ளத்திலே இறைவன் எழுந்துவிட்டால் எங்காம் துன்பம்?

உள்ளத்திற் புகுந்த உத்தமனை ஞானவெள்ளத்தில் திளைத்த சம்பந்த சுவாமிகள் உள்ளங்கவர்கள்வன் என்று அனபின்மிகுதியால் அழைத்தானன்றோ?

துர்மதி தோன்றிவிட்டது எப்பொழுது, எந்நாளிலையில் என்பதெல்லாம் இப்பொழுது வாதஇடவேண்டியதில்லை. எல்லாம நல்லன! யாருக்கு? நல்லானைச் சொல்லும் அடியார் அவர்களுக்குளன்றிருப்போம்.

ஆண்டுக்கொரு நிர்ணயம் பூண்டுநிற்கும் அடியர்

# ஆதீனம் அமைத்து அருந்தொண்டாற்றிய அந்தணப் பெருந்தகை

## இயல் இசை நாடகம் எல்லாம் இறைபணிக்கே என்று கற்றமைந்த கலைக் குரிசில்

நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமிழ் எங்கென்றுர் தாயுமுன்னோர் - நல்லைதிகழ்
ஆதி னசுவாமி நாதகுரு அற்றுர்,பின்
ஏதிசற் கின்சொற் பெருக்கு.

சைவம் திகழ் உலகம் அனைத்திலும் விளங்கிய தெய்வீகத்தொண்டன் நல்லை திருஞானசம்பந்த ஆதீனப்பரமாசாரியர் அருள்வளத் திருவாளர் சுவாமிநாத தேசிக சுவாமிகள் மெய்யடிகளில் வீற்றமரும்பெருங் கதி அடைந்து விட்டார்.

சிவத்தொண்டு என்ற புனிதப்பணிக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய நாவலர் மற்றும் நாயன்மார்கள் நாட்டிய வழியில் நின்று அரை நூற்றாண்டுகளாக அரன் நாமஞ் சொல்லி அவன் கதை சொல்லி அடியார்கள் அகமகிழச் செய்த அருந்தவப் பெருந்தகை நல்லை ஆதினம் அமைத்த பெருமகனார்.

அந்தணர் குலவிளக்காக விளங்கிய பரம்பரை இந் நாட்டில் உண்டு. சிவ ஸ்ரீ செந்தில்நாத ஐயர் வித்வ சிரோமணி கணேசையர் சிவ ஸ்ரீ சங்கர சுப்பையர் என்ற பெயர்கள் இக்குலக் கொடித்தளிர்கள் போன்றன. அவ்வாறே ஸ்ரீ மணி ஐயர் அவர்களும் வளர்ந்து ஆசிரியராக அமர்ந்த பின் இசை இன்பத்தால் இறை பணி செய்தல் ஏற்றதாகுமென எண்ணி அவ்வழி பயில இயற்கைத் திறனும் இடங்கொடுக்கத் தலைசிறந்த இசைக் கலைஞர் ஆனார். ஆனதும் வாழ்நாள் முழுவதும் அரன் கதை சொல்லித் திருமுறை ஓதி வருவாராயினர். சைவ சீலம் எங்கெங்குண்டோ அங்கெல்லாம் சிங்கைநகர் மலேசிய நாடு பாரதபூமி இவையெலாம் வரவேற்க, சிவநெறி வித்வ சிரோமணி யென்ன, கலைநயம் பரப்பியதும் இலங்கையிலும் ஓர் ஆதினம் இருக்க வேண்டுமென் றெண்ணி ஏற்ற பூமியாகும் நல்லைக்கந்தன் சூழலிலே தோற்றுவித்தார் தவநிலையமொன்றை. இப்பெரியார் வண்ணையிலும் நல்லூரிலும் நாவலர் பெருமான் நண்ணிய தொண்டினைப் பின்றொடர்ந்து இவ்விரு திருத்தலச் சூழலிலும் ஆதினப் பரமாசாரியர் பெரும் பணி புரிந்து வந்தனர்.

திருமுறைப் பாராயணத்துக் கொரு முறையுண்டு. அது பண்ணின் பால்

---

கான்; இவ்வாண்டிலரன் றெண்டுக்காய் அர்ப்பணம் செய்வோம் என்று உறுதி பூணுங்கள்.

——

அமைந்தது என்ற உண்மையைச் செயற்றிறனல் நிருபித்துக் காட்டிய பெருந்தகை இவர்.

செல்வச்சந்நிதிப் பெருந் திருவிழாக் காலத்தில் நிகழ்த்திய திருமுறைப் பவனி தெய்வீகமயமானது, நல்லூர் விழாக்கள் என்றுல் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரியரின் சொல்லணி நிகழ்ச்சி என்றே சொல்லலாம்.

இசையில் எடுத்த பெரு முயற்சி போல இவரின் சைவ சித்தாந்த நெறிவளரப்பல்வேறு வகுப்புக்களை நடத்தி வந்தனர் எங்கள் குருமகாசன்னிதானம்.

---

திருக்கேதீச்சரத் , . . ,

( 1-ஆம்பக்கத்து வளர்ச்சி)

பதினைந்தாண்டுகளுக்கு முன் திருக்கேதிச்சரப் பாதயாத்திரையைத் தொடக்கி சிவனடியார் திருக்கூட்டத்துடன் ஆடி ஓண நாளில் பாலாவியில் யாத்திரையை ஆண்டு தோறும் பூர்த்தி செய்து வருகின்றார்.

தென்னிந்திய திருத்தலங்களிலும் இத்தகையாத்திரை செய்து பணிபுரிந்தவர்.

மடாலய பரிபாலனத்தை ஏழாலையூரில் சிறப்பாகச் செய்து அங்கோர்சைவப் பண்புப் பரம்பரையை வளர்த்து வருகின்றார்.

சிவவேடப்பொலிவும் சித்தாந்தத்தெளிவின் முக மலர்ச்சியும உள்ள இப்பெரியார் திருக்கேதீச்சரத்திலே அறுபத்தி மூவரின் திருவுவங்களை அமைப்பதில் முனைனின்றுழைத்தவர்.

சைவசிந்தனையாகச் சைவசித்தாந்தக் கொள்கைகளை மும்மொழிகளில் (செந்தமிழ் வடமொழி ஆங்கிலம்) அமைத்து ஒரு தொகுப்பு வெளியிடும் முயற்சியிலீடுபடுகின்ற இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்தாந்தவித்தகர் என்றபொருத்தமான பட்டத்தைச் சூட்டியிருக்கின்றது.

திருக்கேதீச்சரத் திருப்பணிக்குத் தலைமை தாங்க சைவச் செம்மையால் உரித்துடையவர் இவர்.

## சைவ சித்தாந்த மகாசமாசம் -

( 1 பக்கத்து வளர்ச்சி )

மாலை 4 — 00 8—00 மணி சைவர் மாநாடு தலைவர் முன்னுரை

சொற்பொழிவுகள்: 1 கமலாசர் பல்கலைக்கழகத் துறை திரு. க. வச்சிரவேலு முதலியார்

2 கா. ப. க. திருமுறை ஆராய்ச்சித்துறை திரு. க. வெள்ளைவாரணனர்

3 திரு. சு. சுந்தரமூர்த்தி திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி

4 பண்டிதர் க. உமாமகேஸ்வரன்

தலைவர் முடிவுரை

இரவு 9 00—10 30 மணி திருமுறை இசையரங்கு திருமுறை இசைவாளர் சென்னை சைதாப் பேட்டை பாலசுந்தரனர் திரு, சி, வி பார்த்தசாரதி தருமபுரம் திரு, இராமலிங்கனர் திரு. நாகேந்திரன்

### 9 - 5 - 1981 சனிக்கிழமை

காலை 7: மணி மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் வழிபாடு — வீதிவலம். காலை 9 00 - 12 30 மணி வரை சைவ மங்கையர் மகாநாடு இறைவணக்கம் சங்கீதவித்வச் செல்வி அம்பிகை செல்லையா பிள்ளை மகாஜனக்கல்லூரி மாணக்கர் வரவேற்புரை திருமதி ஞானலிங்கம், வாழ்த்துரை திருமதி இரத்தின நவரத்தினம், தொடக்கவுரை திருமதி சிவநாயகி தியாகராசா தலைமையுரை வைத்தியகலாநிதி இராதா தியாகராசா சொற்பொழிவுகள் கோயம்புத்தூர் திருமதி சுவர்ண சோம சுந்தரம் திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் வித்வத் திருமதி வசந்தா வைத்தியநாதன் தலைவர் முடிவுரை நன்றியுரை திருமதி சிவபாக்கியம் பாலநாதன் பிற்பகல் 2 - 00 3 - 30 மணி சமரச உறுப்பினர் பொதுக்கூட்டம் தலைவர் சமாசத்தலைவர், அலுவலர் தேர்வு சைவமாநாடு மாலை 4 - 00 — 8-00 மணி இறைவணக்கம் பண்ணிசைச் செல்வர் இரா திருஞானசம்பந்தன் தலைவர் கலாநிதி கா, கயிலாசநாதக்குருக்கள் யாழ் பலகலைக்கழ, இந்துநாகரீக பீடத்தலைவர் முன்னுரை சொற்பொழிவுகள் சேக்கிழார் கட்டளைச்சொற் பொழிவு புலவர் ந. ரா முருகவேள் (திருக்கோயில் ஆசிரியர்) வைத்தியகலாநிதி ப. அருணாசலம் — நாகர் கோயில திரு. சு. சுந்தரமூர்த்தி திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத்தலைவர் திரு மு. ஞானப்பிரகாசம், முடிவுரை நன்றியுரை. இரவு 9- 30 — 11 - 00 மணி பன்னிருதிருமுறை இசை அரங்கு கோயம்புத்தூர் திருமுறைத் தமிழ் மணி திருமதி சுவர்ண சோமசுந்தரம் குழுவினர்.

### 10 - 5 - 81 ஞாயிற்றுக்கிழமை

### சைவஇளைஞர் மாநாடு

காலை 7 : மணி கர்சிவிநாயகர் ஆலயவழிபாடு வீதிவலம் காலை 9 - 00 -12 - 30 மணி இறைவணக்கம் சங்கீத வித்வான் நேசபூபதி நாகலிங்கம வரவேற்புரை திரு. நம. சிவப்பிரகாசம் (இந்துசாதன ஆசிரியர்) வாழ்த்துரை ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர் திரு ச. அம்பிகைபாகன் தலைமையுரை கலாநிதி அ. நாகலிங்கம் சொற்பொழிவுகள் திரு க. சொக்கலிங்கம் திரு ச. விநாயகமூர்த்தி திரு வே, ந. சிவராசா (இந்து சமயத்திணைக்களப் பணிப்பாளர் ) முடிவுரை நன்றியுரை திரு, ஏழூர் நாயகம் தெல்லிநகர் இந்து இளைஞர் சங்கம் உபதலைவர். கலந்துரையாடல் பிற்பகல் 2-00—3-30 மணிவரை மாலை 4-00 - 8-00 மணி

### சைவர் மாநாடு

இறை வணக்கம் பண்ணிசை மன்னன் வி. டி. வி, சுப்பிரமணியம் தலைவர் முன்னுரை திரு மு. பழ இரத்தினம செட்டியார். சொற்பொழிவுகள்: இலக்கணவித்தகர் பண்டிதர் கா. நமசிவாயம் திரு. சி. என். சிங்காரவேலு (சென்னை) திரு சு. குருசாமி திரு. தெ. ஞானசுந்தரம் (சென்னை) தலைவர் முடிவுரை நன்றி உரை வாழ்த்து இரவு 10 - 00—12 - 00 மணி நடன அரங்கு கலைஞர் வேல் ஆனந்தன் குழுவின் தாண்டவோதயம்.

---

என்றும் இறைஒளி இன்னமுதில் எய்தவெனில்
நன்று நினைந்து நவின்றுற்றி — மன்று
நடம்புரியும் தில்லை நடராசன் றெண்டே
இடம்பெற வாழ்தல் இயல்,

## சித்தாந்த சாத்திரத் தெளிவு தேற்றும்

(1ம் பக்கத்து வளர்ச்சி)

தைக் கைதொழுது, படைத்தனர் சித்தாந்த சாத்திரத்தை.

பல நூற்றாண்டுகளுக்கு முன் விளங்கிய திருமூலரும் திருவள்ளுவரும் சுருங்கச் சொல்லி வைப்பதில் அருங்கலை விநோதர்களாய் விளங்கினர்.

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே,

என்று திருமூலர் காப்புவணக்கம் செய்தமை காண்க. ஞானச்சுடர் ஒளி வீசப்பெற வேண்டுமாயின் ஞான மூலத்தை நாடுவோம் என்பது திருமூலர் கருத்து.

ஞான பரம்பரை அவதரித்த சிவபுருடர்களின் வழிவந்த உமாபதி சிவாசாரியாரின் சைவநூற்றொண்டின் சிறப்பினை மாணுக்கர்கள் நன்கு பயிலுதல் வேண்டும்.

தர்க்கம் இலக்கணம் இலக்கியம் என்ற நூலுக்கம் யாவும் நுண்மையிலமைந்த நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள். முப்பொருள் விளக்கமாய் முன்னிற்பவை. பசு பதி பாசம் என்ற தொடர்நிலைத் தொகுப்பினைத் திருவருட்பயன் நன்கமைத்திருக்கின்றது.

தில்லைமூவாயிரவர்களில் ஒருவராய் மறைஞானசம்பந்தரின் மாணுக்கராய் சந்தானசாரியரில் நான்காம் அடியாராய் விளங்கிய உமாபதிக்குரவர் சிதம்பரத்துக் கொற்றவன் குடியில் உற்றவர்.

குருவுபசாரம் என்னும் கொடி, தீவர்த்தி, சிவிகை முதலிய கோலத்திற் சென்றுகொண்டிருந்த உமாபதியாரை நோக்கி 'மறைஞானசம்பந்தர்' எய்த சொல்லம்பு "பட்ட கட்டையிற் பகற் குருடன் போகின்றான் பாருங்கள்" மாணுக்கரின் மார்பிற் பட்டது செயற்கைக் குருடு மறைந்துவிட்டது, மறைஞானக் குருவானர், விருதில் வெறுப்புற்றவராய மாணுக்கரானர்.

சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, கொடிக்கவி, உண்மைநெறி விளக்கம், நெஞ்சுவிடுதூது, போற்றிப் பஃறொடை, சங்கற்ப நிராகரணம், கோயிற்புராணம், சேக்கிழார் புராணம் திருமுறை கண்ட புராணம் சிவநாமக கலிவெண்பா சங்கற்ப நிராகரணம் — இவை உமாபதிக்குரவரியற்றிய நூல்கள். பௌட்கராகம வடமொழி வியாக்கியானமும் இச்சிவாசாரியரியற்றிய நூல்களில் ஒன்று.

பதினன்கு மெய்கண்ட சாத்திர நூல்களில் எட்டு நூல்கள் உமாபதி முத்திரையுடையன, இவை மேலே காட்டப்பெற்ற முதல எட்டு நூல்களாகும்.

திருவாதிரைத் திருவிழா நிகழும்பொழுது சிதம்பரத்திலே கொடி மேலேறுது தடைப்பட்டு நின்ற பொழுது 'கொடிக்கவி'யை உமாபதி சிவாசாரியர் பாடிக் கொடியேறுவித்தமை குறிப்பிடத் தக்கது.

சிற்றம்பலவன் திருவோலை கிடைக்கப்பெற்ற கீர்த்தி உள்ளவர் உமாபதியார்

"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு — படிமிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை".

இது அருட் பொலிவினை அறிவுறுத்துகின்றது.

கோயிற் புராணம் அரங்கேற்றப்பட வேண்டிய குறிப்பைத் தில்லை வாழ் அந்தணர்கள் திருவருளால் அறிந்து உமாபதி அடியாரைக் கொண்டு நிறைவேற்றியதும் தவச் சிறப்புகளுக்குச் சான்றாகும்.

ஆண்டுகள் அறுநூற்றுக்கு மேற்பட்டும் அறிவுரைகள் இவை இன்றும் சைவ நூற் களஞ்சியத்தில் மெய் ஒளி பரப்பியவண்ணம் இருக்கின்றன.

உமாபதி சிவாசாரியர்குருபூசை சித்திரைத் திங்கள் உத்தர நட்சத்திரத்தன்று (17-4-1981).

உமாபதி சிவனாரின் உள்ளத்தில் உதிர்ந்த சித்தாந்த உட்பொருளை எம்மால் இலகுவில் அறிந்துகொள்ளக் கூடிய பான்மையில் அவர் எடுத்து விளங்க வைத்தமை திரு அருட் பொலிவுடைய கலைத்திறனன்றி வேறொன்றல்ல.

பதியைப்பற்றிச் சிவாசாரியர் கூறும் ஓரிடத்தில், 'சலமிலன் பேர் சங்கரன்' என்று என்ன சுவையாக இலக்கணம் அமைத்திருக்கின்றார்.

அவ்வாறு பாசமாய ஆணவத்தின்பான்மையை சிவாசாரியர் விளங்க வைப்பதை ஒரு குறளை மட்டும் எடுத்துப் பார்ப்போம்.

'இருள் உருவம் காட்டும் இருபொருளும் காட்டா திது' என்று ஆணவத்தின் அமைப்பைச் சொல்லியவாறு தான் என்னே,

இன்னும் பசுவாம் ஆன்மாவின் பேதத்தை எமக்கு விளங்க வைக்கும் சிவாசாரியர்

"பாயிருள் நீங்கிஞானத்தனைக் காண்டல் ஆன்மா ரூபம்"

என்று 'உண்மைநெறி விளக்கத்திலே' காட்டுகின்றார்!

இன்னும் சிவப்பிரகாசம் என்னும் அருங்கருத்துக் களஞ்சியத்தில் உள்ள உண்மையுரைகளில் ஒன்றை இங்கு பார்ப்பது பொருத்தமாகும்.

எண்ண அரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி அவ் அவரால் அதனால்
அலகில் நிகழ்போகங்கள் அருந்தும் ஆற்றல்
புண்ணிய பாவம் புரிந்து போகவரவு உடைத்தாய்ப்
புணருமிருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளாய்
உண்ணிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடு நற்பசுவர்க்கம் எனஉரைப்பர் உணர்ந்தே.

ஆணவத்தையும் பசுவையும் இனைத்து விளங்க வைக்கும் சிவாசாரியரின் சித்தாந்த சாத்திரநுண்ணறிவை எண்ணவைக்கும் குருபூசைநாளில் மெய்கண்ட ஞானிகளின் பரம்பரையையும் அவர்கள் தந்த அரிய கருத்துக்களைப்பின்னும் உலகுய்ய உற்றநூல்கள்வாயிலாக உதவிய பேரறிஞர்களாம சீடர்களின் வரிசையையும போற்றுதல் சைவமக்களின் கடமையாகும்.

சித்திரைத்திங்களிலே சந்தானசாரியரில் ஒருவரினதும் சமயகுரவர்களில் ஒருவரினதும் 'குரு பூசைகள் நிகழ்வது இக்காலத்தில் மேன்மையை எடுத்துக்காட்டுவதாகும்.

## நல்லை ஆதீனம் நாட்டின் நவமான சைவ இல்லம்

## பரமாசாரியரின் பத்திப் பண்பு மேலும் பரவ அடியார்கள் தொண்டுநனி அர்ப்பணிப்பாராக

நல்லை ஆதீனம் இந்துசமய வளர்ச்சியில் இலங்கையில் ஆற்றிய பணிகள் காலம் கடந்தும் நிலைத்து நிற்கும். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருநாமம் இலங்கையிலும், இந்தியாவிலும் இந்துப்பெருமக்கள் வாழும் இடங்கள் எங்கும் துருவ நட்சத்திரம்போல் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றது. ஆன்மீக வளர்ச்சிக்கும் இந்துசமய எழுச்சிக்கும் அவர் ஆற்றிய பணி இலட்சக்கணக்கானோர் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றது. அவர் இறைவனடி சேர்ந்தார் என்னும் செய்தி பலரின் உள்ளத்தை ஒரு கணத்தில் உலுக்கி விட்டது. மண்ணிற்பிறந்தார் என்றோ ஒருநாள் மரணிப்பர் என்னும் சமயதத்துவம் கண்ணீரையும் கவலையையும் மறக்கச் செய்கின்றது.

புனித அப் புண்ணியரின் அடியொற்றி அரும்பணியாற்ற எழுந்தருளியிருக்கும் இளவல் பீட ஆரோகணம் இனிது நிறைவேற. அவர் பணி சிறந்து பொலிந்து இந்துசமய உலகிற்கு அருந்துணையாக நிறைகளெல்லாம்வல்ல திருவருள் துணைபுரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்,

செ. இராசதுரை
பிரதேச அபிவிருத்தி அமைச்சர்.

## பீட ஆரோகண விழா

அண்மையில் பரிபூரண நிலை எய்திச் சமாதியடைந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் இடத்திற்கு நல்லை ஆதீன இளவரசு ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பீட ஆரோகண விழா சென்ற 19-04-1981 (ஞாயிறு காலை 8-30 மணிக்கு நடைபெற்றது.

## வாழ்க்கையில் .....

(2ம் பக்கத்து வளர்ச்சி)

நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ள ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்,

காலை ஒன்பது நாழிகையளவில் கணபதி பூஜை ஆராதனை அநுக்ஞை கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம் ஆதியன நிகழ்ந்தன. மாவை சிவ ஸ்ரீ கு. பஞ்சநதக் குருக்கள் தலைமை தாங்கினர். ——

## நாவலர் சபையின் அரிய முயற்சி

### இந்து சமய அலுவல் அமைச்சின் பேருதவி

நாவலர் பெருமான் எழுதி வெளியிட்ட கந்தபுராண வசனம் என்னும் நூலை 75 ஆயிரம் ரூபா செலவில் மறு பதிப்புச் செய்யும் முயற்சியை ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை மேற்கொண்டிருக்கிறது. நாவலர் நினைவாகக் கடந்த காலங்களில் சிலை, மணிமண்டபம் மாநாடுகள் விழாக்கள், மலர்வெளியீடுகள் முதலியபணிகளைச் சிறந்த முறையிற் செய்துள்ள இச்சபையினர் இப்போது கிடைப்பதற்கு அரிதாகவுள்ள நாவலர் நூல்களைத் தொடர்ந்து வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர் இத்திட்டத்தின் படி முதலாவதாகக் கந்தபுராண வசனத்தை மறுபதிப்புச் செய்யும் வேலைகள் சபையினாலே துரிதமாகச் செய்யப்பட்டுவருகின்றன,

நாவலர் சபையின் ஆட்சிக்குழு முன்னை நாள் நீதிஅரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களின் இல்லத்தில் அண்மையிற் கூடியபோது இந்நூலின் மறுபதிப்பு வேலைகளின் முன்னேற்றம் பற்றி ஆராயப்பட்டது. நூலில் 400 பக்கம் அச்சிடப்பட்டு விட்டதாகவும் மிகுதி 200 பக்கங்கள் மட்டுமே அச்சிடப்பட இருப்பதாகவும் இக் கூட்டத்திற் சுட்டிக்காட்டப்பட்டது, எஞ்சியுள்ள வேலைகளை முடித்து வரைவில் நூலை வெளியிடுவதற்குச் சபைக்கு அவசரமாக நிதி தேவைப்படுவதால் சைவ ஸ்தாபனங்களிடமும் பெரியார்களிடமும் இம் முயற்சிக்கு உதவிகோருவதெனவும் உடனடியாக முற்பணம் அனுப்பிப் பிரதிகளைப் பதிவு செய்து கொள்ளும் பாடசாலைகள், தனிப்பட்டவருக்கு பிரதியொன்றை ஐம்பது ரூபாவுக்கு வழங்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது,

இம்முயற்சிக்கென இந்து சமய விவகார அமைச்சு அண்மையில 15 ஆயிரம் ரூபாவை நாவலர் சபைக்கு வழங்கி ஊக்குவித்தது குபபதும் குறிப்பிடத்தக்கது.

என்று சபைச் செயலாளர் அறிவிக்கின்றனர் இச்சபையின் அலுவலகம் கொழும்பு 7. கோட்டன் றெறெஸ்-4

## பாலஸ் தாபனம்

பருத்தித்துறை — விநாயகர் முதலியார் வீதியில் எழுந்தருளியிருக்கும் சித்தி விநாயகர் — சின்னப்பிள்ளையார் கோவிலின் திருப்பணிகள் நடைபெறும் காரணமாக 24.4.81 வெள்ளிக்கிழமை காலை 6 30 க்கு பாலஸ்தாபனம் நடைபெறும். பழமைவாய்ந்த இவ்வாலயத்தின் பாலஸ்தாபனக் கிரியைகளை பிரம்ம ஸ்ரீ எஸ் சிவசாமிக் குருக்கள் நிகழ்த்திவைப்பார்.

## சைவசமய அபிவிருத்திக் கழகம்

வண்ணை - சாத்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 27 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 5.4.81 ஞாயிற்றுக்கிழமை திரு. R.V.S பாலசுப்ரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடல் பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரத்தை புனித நகரமாக்குவதற்கு வழி செய்தவர்கட்கு பாராட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது கழகத்தின் வளர்ச்சி வருங்கால சவிகள் என்பன பற்றி சபையோர் ஆலோசனை கூறினர்கள்

## A TRIBUTE

(continued from page 4)

"On some fond breast the
parting soul relies
Some pious drops the
closing eye requires"

These have I endeavoured to supply with these artless but affectionate lines.

Contemporary opinion may not always be the safest or the best criterion in appraising the worth or assessing the value, particularly of a character so dominant as Kathiravetpillai; but whatever differences of opinion there may exist even among his colleagues with regard to certain views he may have held, one ventures to think, that almost by universal acclaim, he will go down to history as a hard-worked, sincere M.P. and a dependable politician.

### Funeral

Men and women of all rank and station bemoaned his loss. Ministers and M. PP. friends and foes Hindus and Christians attended his funeral in large numbers and paid their silent tribute to his memory.

"The boast of heraldry
the pomp of power
And all that beauty and
all that wealth
e'er gave
Await alike the
inevitable hour,
The paths of glory lead
but to the grave,"

Hindu Organ

Friday, 17, 24 - 4 - 81

## PANACEA FOR ALL ILLS - PRAYER

Thurmathi has come and gone a number of times and will continue to do so every sixty years. The name sounds in a not - too happy tone; but names are deceptive. What is good and what is bad can be determined by the actions of individuals; the determining Power is Providence. All that man can do to hope for the best is to offer Prayers dutifully and piously.

The next twelve lunar months comprising one year carries once again the name Thurmathi. But the fact remains that the ordeal has to be borne.

What can be our method of approach to the solving of problems that face us. These problems had been there in earlier times too; people had either solved them or had borne the brunt with equanimity.

Every morning almost all the broadcasting stations open their daily programme with items of fervent prayer. As for the Saiva religionists, the singing of Thirumurais in the opening hours of the day, naturally would help them remember that Four great Teachers had lived their lofty lives chanting the name of Siva in holy hymns. To listen to these majestic lines of melodious prayer at day - break would certainly help man pave the way for peaceful living.

## —RAMANATHAN—JAYANTHI—OCCASION FOR RE - DEDICATION

JAYANTHI celebrations in honour of departed leaders give their followers joyous enthusiasm for continuing the work of the illustrious past

Ramanathan Jayanthi is celebrated in April. Several years ago, the memorial lecture was delivered by that renowned scholar and statesman Sir C. P. Ramasamy Iyer.

This year the University of Jaffna has undertaken to organise Jayanthi celebrations on May 6 & 7 in the form of a memorial lecture. by Patma Bhoojan Kasturi rinivasan. The Parameswara College Board of Directors has made the necessary financial provision for this yearly programe.

Letter to the Editor

## HINDU TEMPLES and AFFAIRS

*(By Sri S. Sivasubramaniam)*
Life Member,
Jaffna Saiva Paripalana Sabhai.

It is heartening that the National State Assembly, the President, Prime Minister, and the Government Party and the Non-Government groups called the Opposition are taking interest in Hindu Temples and affairs. The appointment of a Minister for Hindu Affairs is also welcome, even as the continuance of the Hindu Religious Affairs Advisory Board to tender its views and proposals to the Honourable Minister for Cultural Affairs, and the Government. Religion is the first thing in life and it is an act of very great merit that Government is endeavouring to promote the religious consciousness of all creeds co-existing together in a happy and friendly manner in Sri Lanka Further. the unofficial institution of the Congress of Religions of Sri Lanka is a rare item in the life of the international community.

Apropos the subject of Hindu Temples generally the following report in the issue of the Madras "Hindu" Newspaper of Sunday, March 15, 1981. could prove helpful.

### GOVT. CONTROL OVER TEMPLES OPPOSED

Inaugurating the Vishal Hindu Sammelanam organised by the VishwaHindu Parishaki in Jammu on Friday, the former Union Education Minister, Dr. Karan Singh, M. P. expressed concern over the miserable plight of the minority Hindu community in the State, particularly the Kashmir Valley.

He stressed the need to preserve and protect the large number of temples in the State. He opposed all moves of the present State Government to have direct or indirect control over the temples.

### P. T. I. Reports

Jagadguru Sankaracharya of Dwaraka Peeth, depreciated the tendency of some Governments to interfere with the working of Hindu Shrines.

"The Hindus should introduce reforms in their religions institutions themselves rather than let the Authorities tell them what they should do", he said.

He appealed to people to follow strictly the path of dharma which alone could help them overcome their difficulties

The foregoing quotatation regarding Hindu Temples in India has a relevance to Hindu Temples in Sri Lanka; [further thoughts on the subject are in the mind of the humble undersigned for the presentation to the Government and the public.]

It will be relevent to state with due deferences that His Holiness the Jagadguru Sankaracharya Swamigal of Dwaraka is one of the leaders of Hindu Religious Hierarchy with the gift of premonition and prophetic vision When Srimathi Indira Gandhi lost at the Indian General Elections the revered Swamigal stated that the intrepid lady could adjust and revise her policy and that India could invest her again with the duty of carrying the burden of that vast country on her devoted head.

The financial assistance rendered by the Government and the President to Hindu Temples and institutions a matter for which Hindu public is very thankful The Hindu community in Sri Lanka is the weakest in Sri Lanka and merits assistance, moral and material, from all other sections of the general public of the country and the government, and from Hindus living outside Sri Lanka, and also from all agencies, institutions and individuals of all denominations, irrespective of creed or race in all parts of the world.

## NOTICE!

This is to inform the Government of Tamil Nad and the General Public there that by deed No. 12162 dated 4th April 1981 attested by G. V. Balasingham J. P. Solicitor and Notary Public, Jaffna. Sri Lanka. I Elagupillai Ramalingam of Mathagal, Sri Lanka have revoked and cancelled the Power of Attorney No. 12521 dated 8-9-1980 and attested by M. K. Subramaniam Notary public, Vaddukoddai, granted by me in favour of Arunasalam Sundaram of Moolai, Sri Lanka to manage all affairs of the Chevvaikilamai Madam Trust, on my behalf.

This 20th day of April 1981.

(34) E. RAMALINGAM

## A TRIBUTE

Mr. S. Kathirevetpillai; M. P. for Kopay.

*(from Dr. E. P. Rasiah, J. P.)*
(Member, Saiva Paripalana Sahbai)

Mr.S Kathirevetpillai, born about 67 years ago suddenly succumbed to a heart attack whilst he was in South India, on 31-3-81. The human body is so vulnerable that Death can claim it at the appointed hour, Alas! nothing can prevent it—neither status nor service neither wit nor wisdom.

### Socialist

Though blue - blooded by birth, he had socialistic ideas ingrained into him and had sought the levelling up of classes and castes and had worked unceasingly for the uplift of village life. Born into life in the lap of luxury and opulence, he had lived discarding ease and indolence. Time had dealt gently with his cherubic countenance and hard-worked constitution Slightly greying hair alone betrayed the fact that he was just past the meridian. He had a genial winsome smile which invited confidence and friendship. He was known to great friend and foe (if any) with a ringing hearty laugh. His word was as sound as a bond and he never failed a friend. He possessed a guileless heart and expected frank and straight dealing from all.

### Politician

Though a politician by compulsion of events, yet he was a dependable politician, for, he rarely slipped or somersaulted, however muddy or slippery the political ground may have been He rarely deviated from the path of rectitude and service to his people was uppermost in his minds.

### Lawyer

He was a conscientious lawyer and rarely accepted a shady brief, however tempting the fee may have been. On a few occasions he had appeared against me and had subjected me to a milling cross - examination; duty to his client; but when we came out of the precincts of the Court - house he was as friendly as ever.

### Man

He had talked with crowds and yet kept his virtues. He had moved with kings but ne'er lost the common touch He had forced his heart, nerve and sinew to serve their turn long after they had gone, filling the unforgiving minute with sixty seconds worth of distance run. The curtain has fallen. Stilled now was that deep compassionate voice and closed for ever those wise winsome eyes. At such a time, it is said.

(continued in page 3)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 17. 24-4-1981*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam